REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 5உ வியாழன் (19—5—55) ★ ★ வெளியூர்: வைகாசி 6உ வெள்ளி (20—5—55) [இதழ் 289

சமரச முயற்சி தோல்வி!

கராச்சி, மே 19—

பாகிஸ்தான் — ஆப்கானிஸ்தான் நாடுகளிடையே நிலவிவரும் தகராறுக்கு சமரசம் காண சவூதி அரேபிய மன்னர் மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றுவிட்டதாகத் தெரிகிறது.

ஆப்கன் கருத்திற்கு ஒத்துவரும்படி பாகிஸ்தான் சர்க்காரைச் செய்ய முடியாததால் இன்று சவூதி அரேபிய இளவரசர் ஊர் திரும்புவாராம்.

ஆசாத் காஷ்மீர் பகுதியில் அமளி!

பாகிஸ்தானை எதிர்த்து சுதானியர் ஆர்ப்பாட்டம்

ஆசாத் அரசாங்க முன்னாள் தலைவர் கைது!

காஷ்மீர் ம. சோ. க. தலைவர் கூற்று

ஜம்மு, மே 18—

ஆசாத் காஷ்மீர் சர்க்காருக்கு எதிராக சுதானியர்கள் என்ற வகுப்பார் அமளி நடத்துவதாகக் கூறப்படுகிறது.

ஆசாத் காஷ்மீர் சர்க்காரின் முன்னாள் தலைமைப் பீடமான பாலந்திரி பகுதியில் வாழும் சுதானியர் வகுப்பினர், தங்களிலிருக்கும் முன்னாள் இராணுவத்தினரின் பலத்துடன் பாகிஸ்தான் இராணுவத்திற்கும், தற்போதைய ஆசாத் காஷ்மீர் சர்க்காருக்கும் எதிராக கிளர்ந்தெழுந்துள்ளனராம்.

இந்தக் கிளர்ச்சியை ஒட்டி, ஆசாத் காஷ்மீர் சர்க்காரின் தலைவராயிருந்த சர்தார் முகமது இப்ரஹீம் என்பவரை பாகிஸ்தான் இராணுவத்தினர் கைது செய்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த தகவலை காஷ்மீர் ம. சோ. கட்சித் தலைவரான நந்தகுமார் வெளியிட்டிருக்கிறார்.

அவர் 10 நாட்களாக ஆசாத் காஷ்மீர் எல்லைப் பகுதியில் உள்ள ராஜௌரி பூன்ச் எனும் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்திருக்கிறாராம்.

போர் நிறுத்த ஒப்பந்தப்படி, இந்திய இராணுவத்தினர், ஆசாத் காஷ்மீர் பகுதியைத் திரும்பப் பெற்றுக் கொள்வதை சுதானியர்கள் மனமார வரவேற்பர் என்றும் நந்தகுமார் தெரிவித்திருக்கிறாராம்.

"'நமது மக்களுக்கும்' இராணுவத்தினருக்கும் உள்ள உறவு இதய பூர்வமானது; ஆனால், எல்லைப் பகுதிகளில் தனக்குள்ள பொறுப்புகளை காஷ்மீர் சர்க்கார் உணர்ந்ததாகத் தெரியவில்லை,"

என்றும், அந்த ம. சோ. கட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறாராம்.

நான்கு வல்லரசு மாநாடு

அமெரிக்கத் தலைவர் கருத்து

"ஒருவர்தம் சொந்த நாட்டின் நலனுக்காக, மற்ற நாட்டு மக்களின் உரிமைகளை விற்பதான திருப்திப்படுத்தும் கொள்கையை தாம் வரப் போகும் நால்வர் மாநாட்டில் ஆதரிக்கப் போவதில்லை,"

என, அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசனோவர் கூறியிருக்கிறாராம்.

சோவியத் ரஷ்யாவுடன், மேற்கத்திய நாடுகள் கொள்ளும் உறவு பற்றி மிகக் கவனமாக இருக்க வேண்டுமென்றும், அவர் எச்சரிக்கை தந்தாராம்.

உடனடிப் பலன்!

இந்தியா — பாகிஸ்தான் பிரதமர்கள் கூடிப் பேசியதின் உடனடிப் பலனாக, காஷ்மீர் தகராறு இனி ஐ. நா. சபை நிகழ்ச்சி நிரலிலிருந்து பெயர்ந்துவிடும் என்று கூறப்படுகிறது.

தகராறை, இரு நாட்டுப் பிரதமர்களும் தாங்களே பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென முடிவு செய்திருக்கின்றனர் என்றும் நம்பப்படுகிறது.

கோதுமை விலை வீழ்ச்சியைத் தடுக்க ஒரு கோடி ரூபாய்!

உத்திரப் பிரதேசத்திற்கு இந்தியப் பேரரசின் தாராளம்!

லக்னோ, மே 19—

விவசாய வளர்ச்சியின் காரணமாக ஒவ்வொரு மாநிலத்திலும் மூல உணவுத் தானிய உற்பத்தி கூடியிருக்கிறது. உற்பத்திப்பெருக்கின் காரணமாக விலையும் சரிந்துகொண்டு வருகிறது.

இவ்விலை வீழ்ச்சியின் காரணமாக உத்திரப் பிரதேசத்தில் கோதுமை பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிகப்படியான கோதுமையை சொந்தத்தில் அரசாங்கம் குறிப்பிட்ட விலைக்குக் கொள்முதல் செய்வதின் மூலம், கோதுமையின் விலைச் சரிவைக் கட்டுப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது.

இத்துறையில் உத்திரப் பிரதேசம் மேற்கொண்டுள்ள முயற்சிக்கு இந்தியப் பேரரசு பேராதரவு காட்டி வருகிறது. ஏற்கனவே அரசாங்க சார்பில் கோதுமையைக் கொள்முதல் செய்வதற்காக 20-லட்சம் ரூபாய் வரை உத்திரப் பிரதேச அரசாங்கத்திற்கு இந்தியப் பேரரசு உதவியிருக்கிறது.

மேற்படி கோதுமைக் கொள்முதலை தொடர்ந்து செய்வதற்காக மேலும் 80-லட்சம் ரூபாய் கொடுத்து உதவி இருக்கிறது இந்தியப் பேரரசு!

பரிமாறுகிறவர்கள் நம்மவர்களாக இருக்கும்பொழுது, பந்தியில், முதலில் உட்கார்ந்தால் என்ன?—கடைசி வரிசையில் உட்கார்ந்தால் என்ன? உத்திரப் பிரதேசத்தின் அதிருஷ்டமே அதிருஷ்டம்!

★

'வேலை கொடு! இல்லையேல் மாளிகை முன் தற்கொலை செய்து மடிவேன்!'

பம்பாய் கவர்னருக்கு ஒரு அகதியின் மிரட்டல்!

பம்பாய், மே 19—

"உடனடியாக எனக்கு ஒரு வேலை கொடு; இல்லையேல் செவ்வாய்க் கிழமை மாலை 6-30 மணியளவில் அரசாங்க மாளிகை முன் தற்கொலை செய்து மடிவேன்."

—இவ்வாறு, ஒரு மிரட்டல் கடிதத்தை பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள ஒரு அகதி, பம்பாய் கவர்னருக்கு எழுதியுள்ளார்.

பாகிஸ்தான் பிரிவினையின் போது தனது குடும்பத்தை இழந்துவிட்டதாலும், வேலை கிடைக்காததாலும் உயிர் வாழ்வதில் தனக்கு அதிருப்தி ஏற்பட்டிருப்பதாக அவன் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அந்த அகதி வருவான் என கவர்னர் மாளிகையைச் சுற்றி, சாதாரண உடையில் பாதுகாப்புப் படையினர் வேவு பார்த்துக் காத்துக்கிடந்தனர்.

கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி அவன் மாளிகை முன் வரவில்லை.

அந்த அகதி தனது பெயரை கிருஷ்ணசந்த் எனக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தானாம். அவனை போலீஸ்தேடிக்கொண்டிருக்கிறது.

ரூ. 20 லட்சம் மதிப்புடைய கோதுமை கொள்முதல்

மட்ட ரக கோதுமையையும் வாங்க ஏற்பாடு!

மத்திய பாரத் அரசாங்கத்தின் அக்கறை!

உத்திரப் பிரதேசத்தைப்போலவே, மத்திய பாரத்திலும் கோதுமையின் விலை சரிந்துகிடக்கிறது. மணங்கு ஒன்று 10 ரூபாய் விதம் இதுவரை 20 லட்ச ரூபாய்க்கு, சொந்தப் பொறுப்பில் அங்குள்ள அரசாங்கம் கொள்முதல் செய்திருக்கிறது.

கோதுமைக் கொள்முதல் மத்திய பாரத் அரசாங்கத்தின் சொந்த முயற்சி அல்ல; இந்தியப் பேரரசின் ஆணைப்படிதான், இந்தியப் பேரரசின் பெயரில், கோதுமை கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது; மத்திய பாரத்தில் 15 இடங்களில் கோதுமைக் கொள்முதல் நிலையங்கள் பணிபுரிந்து வருகின்றன.

இதுவரையிலும் வாங்கப்பட்டுள்ள 30 லட்ச ரூபாய் மதிப்புடைய கோதுமை முழுதும் வட மத்திய பாரத்திலேயே வாங்கப்பட்டிருக்கிறது. அங்குதான், மணங்கு ஒன்று 10 ரூபாய்க்கும் குறைவாக விற்கப்படுகிறதாம்.

உயர்ந்த ரகக் கோதுமையை வாங்குவதோடுமட்டுமல்லாமல், மட்ட ரகக் கோதுமையையும் இனிமேல் வாங்கப்போவதாக மத்திய பாரத் உணவு மந்திரி கூறியுள்ளார். மட்ட ரகக் கோதுமை மணங்கு ஒன்று ரூ. 6-க்கும் மலிவாக விற்கப்படுகிறது எனத் தெரிகிறது.

மக்கள் வாழாத கிராமங்கள்!

இந்தூர், மே. 18—

"மத்திய பாரத் மாநிலத்தில் உள்ள 19,993 கிராமங்களில், 2,038 கிராமங்களில் மக்கள் எவருமே வசிப்பதில்லை,"

என, மக்கள் தொகைக் கணக்குகள் கூறுகின்றன.

எஞ்சிய 16,431 கிராமங்களில் 500-க்கும் குறைவாகவே மக்கள் தொகை உள்ளதாம்!

போபால் மாநிலத்திலும் இருக்கிற 2,423 கிராமங்களில், 324 கிராமங்களில், மக்கள் எவருமே வசிப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறதாம்.

1954, செப்டம்பர் வரை, சமுதாய நலத் திட்டங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் ஆகியவற்றின்கீழ் 7,607 கிணறுகள் அமைக்கப்பட்டன; அதே காலத்தில், 11,935 கிணறுகள் புதுப்பிக்கப்பட்டன.

நேபாள முன்னாள் மந்திரி கைது

காட்மண்டு, மே 18—

நேபாளத்தில் கொய்ராலா மந்திரி சபையில் அங்கம் பெற்றிருந்த நாரதமுனி துல்லங் என்பவர் பிரிஜார் எனுமிடத்தில் கைது செய்யப்பட்டு இங்கு கொணரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் எதும் அறிவிக்கப்படவில்லையாம்.

கத்தியைக் காட்டி மிரட்டிய முரடனை சிறைபடுத்திய விந்தை!

வீர மங்கையின் விவேகச் செயல்!

நாகபுரி, மே 18—

ஓடிக்கொண்டிருந்த புகைவண்டியில் கத்தியை எடுத்துக் காட்டி மிரட்டி, 'நகைகளைக் கொடுங்கள்' எனக் கெடுபிடி செய்தான் ஒரு கயவன்; கத்தியுடன் கூடிய கள்ளனைக் கண்டதும் அதிர்ச்சி ஏற்பட்ட போதிலும், சில விநாடியில் சுய அறிவு பெற்று, அவனைத் தந்திரமாக சிறை பிடித்துவிட்டாள் ஒரு பெண் பிரயாணி!

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

அர்ச்சனையிலும் 'அகில இந்திய உறவு'

"தமிழ் நாட்டுத் திருக்கோவில்களில் தமிழில் அர்ச்சனை நடந்தால், இக்கோயில்கள் மட்டும் தனித்தியங்க வேண்டியிருக்கும் என்ற தென்னிந்திய அர்ச்சக சங்கத்தார் தீர்மானம் சற்றும் பொருந்தாததாகும்;

"தமிழில் விருப்பம் உடையவர்களுக்குத்தான் அர்ச்சனையை தமிழில் செய்விக்க வேண்டும் என்று சொல்கிறோம்;

"வடமொழியில் விருப்புகிறவர்களுக்கு, அம்மொழியிலும் செய்து தரலாம்;

"எனவே, இதில் 'அகில இந்திய உறவு' பாதிக்கப்படுவதற்கு எதுவும் இல்லை,"

என்று, குன்றக் குடிஅடிகளார் விளக்கம் தந்திருக்கிறாராம் — 'தமிழில் அர்ச்சனை கூடாது,' என்று தீர்மானம் நிறைவேற்றிய அர்ச்சக சங்க நிர்வாகிகளுக்கு!

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—5—'55 வியாழன்

அரவம் சீறுகிறது!

ஆம்! அரவம் சீறுகிறது! தனது நச்சுப் பற்களைப் பதிய வைத்து, கொடிய நஞ்சைப் பிறர் குருதியுடன் கலக்க முயற்சிக்கிறது!

தனது ஆதிக்கம் அழிந்து படும்; அதனுல் தனது உயர் வாழ்விற்கு முடிவு ஏற்பட்டு விடும்—என்ற நினைப்பு அதற்கு ஏற்பட்ட உடன் ஆரிய அரவம் சீற்றம் கொள்ளுகிறது! படமெடுத்து ஆடி, பகைமை முறியடிக்கப் பார்க்கிறது!

தென்னுட்டுக் கோயில்களில் தமிழில்தான் 'இறை வழிபாடு' இடம் பெற வேண்டும் என்பது குன்றக்குடிகளாரின் 'அருள் நெறி!' அதை, அவர் போகிற இடம் யாண்டும், வாய்ப்பு நேர்ந்துழி, வலியுறுத்தி வருகிருர்!

இறை வழிபாட்டைத் தமிழில் ஆற்றுவதால் ஏதாவது பயன் விளையும் என்பதில் துளியும் நம்பிக்கை வைக்காமல், திராவிடத்தில்—தமிழ் நாட்டில்—திராவிடர் வழிபடும் ஆலயங்களில் தமிழில் 'இறை வழிபாடு' இருப்பதுதான் முறை, அதுதான் தமிழனின் பிறப்புரிமை எனக் கூறி உரிமைக் குரல் எழுப்பினேம், நாம் ஒரு காலத்தில். அக்கோரிக்கையை நாம் இன்னும் கைவிட்டுவிடவில்லை. ஆனல், அக்கோரிக்கை நமது பணியில் ஒரு சிறு இடத்தையே இன்று பெற்றிருக்கிறது.

ஆரிய அதிக்கிரம ஆதிக்கத்திற்கு எதிராக நாம் முன்பு ஒரு நாள் துவக்கிய 'தமிழ் மொழியில் இறை வழிபாடு இருக்க வேண்டும்' என்ற உரிமை முழக்கம், நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும்—நாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய பலனைக் காட்டிலும் பன்மடங்கு நற்பயனை விளைவித்தது. 'பூலோகத்தில் சிவலோகப் பிரதிநிதிகளாக வீற்றிருக்கும்' காவியுடையினரைக்கூட, நமது உரிமை அணியில் ஒன்றுபட்டு உழைக்கும் அளவு வெற்றியைக் கொடுத்தது.

நாம் பெற்ற அப்பெரும் வெற்றியின் மிகச் சிறு கூறு தான், குன்றக்குடிகளாரின் இன்றைய 'இறை வழிபாட்டிற்குத் தமிழ்' என்ற நாவசைப்பு. அக்கோரிக்கையில் அவர் கொண்டுள்ள அடிப்படை நோக்கிற்கும், நமது நோக்கிற்கும் அறவே வேறுபாடு உண்டு. இதை முன்பே விளக்கி உள்ளோம்.

தென்னுட்டு ஆலயங்களில் நடைபெற்றுவரும் 'இறை வழிபாட்டில்' இன்று இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதம் விலக்கப்பட்டு, அதனிடத்தில் தமிழ் மொழி இடம் பெற வேண்டும் என்பது குன்றக்குடியாரின் கோரிக்கை. இது மிகமிகச் சாதாரணமானது — வெற்றி, தாம் நாவசைத்ததும் தம்மைத் தேடி ஓடோடியும் வந்துவிடும் என்றுதான், கோரிக்கையை வெளியிட்ட நேரத்தில் குன்றக்குடிகளாரும் மனப்பால் குடித்திருப்பார். அவர் 'அருள் நெறித் திருக்கூட்ட'மும் உறுதியாக நம்பிக்கொண்டு இருந்திருக்கும்.

'எங்கள் அருள் நெறியார் திருவாய் மலர்ந்தருளிவிட்டார்! இனி தென்னுட்டு ஆலயங்களில் சமஸ்கிருத ஒலி கேட்காது! தமிழ் முழங்கும்; மணங் கமழும்!'

'பாரீர்! தமிழ் மக்காள்! எங்கள் அடிகளாருக்குள்ள செல்வாக்கை! எங்கள் அருள் நெறி அணியில் ஒன்றுபடுங்கள் செல்வர்காள்! சீமான்காள்! ஆலை அரசுகாள்! அடுத்த தேர்தலில் நீங்கள்தான் சட்டசபை—மக்கள் சபை அனைத்திலும் வெற்றி பெறுவீர்! வாருங்கள்! வாருங்கள்! எமது ஆசானின் அடிபணியுங்கள்! அரசியல் ஆதிக்கம் பெறுவீர்!''

இவ்வாறு வெற்றி முழக்கமிடக் கனவு கண்டுகொண்டு இருந்தது, அருள் நெறிக் கூட்டம்.

தமது 'தமிழில் இறை வழிபாடு' என்ற நாவசைப்பு வெற்றி பெறும்; அவ்வெற்றியின் மூலம் தமது போராற்றலுக்குப் புதிய மதிப்பு ஏற்படும்; அதை விலைமதிக்க முடியாத பொருளெனக் கூறி விற்பனை செய்ய புதிய அரசியல் கடை திறக்கலாம்; அருள் நெறியையும் அரசியலையும் இணைத்துத் தமது ஆதிக்கத்திற்குப் புதிய குத்தகை பெறலாம்—என்ற எண்ணங்கள் குன்றக்குடிகளாரின் உள்ளத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தன எனக் கூறுவது மிகையாகாது. ஆண்டிக்கோலத்தில் அரசியலில் தலையிட்டவர்களின் உள்ளக்கிடக்கையை வரலாறு ஏற்கனவே எடுத்துக் காட்டி இருக்கிறது.

'வடமொழியே விலகிச் செல்! தமிழ் மொழியே குடிபுகு!' எனத் தாம் திருவாய் மலர்ந்தருளாததால்தான், இன்னமும் திராவிட நாட்டின் கோயில்களில் வடமொழி ஆதிக்கம் இருந்துவருகிறது எனக் குன்றக்குடிகளார் எண்ணியே இருப்பார். தாம் கட்டளை இட்டதும் அல்லது எச்சரித்ததும் கோயில்களில் ஆதிக்கம் பெற்றுள்ள வடமொழி, 'செத்தேன், பிழைத்தேன்' என விரண்டோடிவிடும் எனவும் அடிகளார் கருதிக்கொண்டே இருப்பார். 'அருள் நெறி அண்ணலே! தேவார, திருவாசகப் பெருமையை இதுகாறும் உணராது வடமொழி மந்திரங்களையே பெரிதென நம்பிக்கெட்டோம்-இறைவனின் அருள் பெறவும் தவறிழைத்தோம்—அடிபணிகிறோம்! எங்களை அலட்சியப்படுத்தாது ஆட்கொண்டு அருள் புரிவீராக! அருள் நெறி அண்ணலே!' எனத் தமிழ் நாட்டு ஆலய அர்ச்சகர்கள், தம்மிருப்பிடம் தேடி அலறிப்புடைத்து ஓடோடி வருவர் எனக் குன்றக்குடிகளார் எதிர்பார்த்திருப்பார்.

இப்படி நடைபெறக்கூடும் என அடிகளார் எதிர்பார்த்திருப்பார் என நாம் குறிப்பிடுவது நமது கற்பனை அல்ல. தமது கோரிக்கைக்கு எதிர்ப்பு—புயல் வேகத்தில்—கிளம்பியதைக் காண்பதும், அவர் கொதிப்படைந்து பேசிவருவதும், அவருக்கிருந்த ஆரம்ப கால நம்பிக்கையின் அளவையும், எதிர்ப்பால் அவர் அடைந்துள்ள அதிர்ச்சியின் தரத்தையும் விளக்கிக் காட்டுவதாக உள்ளது.

ஆரிய ஆதிக்கத்தை எதிர்ப்பது எவ்வளவு பயங்கரமான பணி என்பதை, இப்பொழுது குன்றக்குடியார் உணர்ந்து கொண்டிருப்பார் என்றே நம்புகிறோம். இது குறித்து மீண்டும் ஒருமுறை விளக்கமாக எழுதுவோம்.

உங்கள் குறிப்புக்கு!

"1948 முதல் 1954—55 வரையிலும் அமெரிக்காவிடமிருந்து பொருளாதார உதவியாகவும் அவசர உதவிகளாகவும் இந்தியா 3,50,03,000 டாலர் பெற்றுக் கொண்டுள்ளதாம்! ரஷ்யாவிடமிருந்து ஒருவிதமான உதவியும் இந்தியா பெற்றுக்கொள்ளவில்லையாம்! அமெரிக்காவிடமிருந்து கடனுகப் பெற்ற தொகைகளைச் சேர்த்தால் இந்தியா பெற்றுள்ள தொகை இன்னும் அதிகமாக இருக்குமாம்!

கீல்வாயு நோய்

ஆராய்ச்சி செய்ய குழு நியமனம்

நாடு முழுவதும் சுற்றி கீல்வாயு நோய்பற்றித் தகவல் சேகரிக்க பிரிட்டனிலுள்ள சாம்ராஜ்ய கீல்வாயு கவுன்சில் நிச்சயித்திருக்கிறது. பிரிட்டனிலும், வேறு சில காமன்வெல்த் நாடுகளிலும் தகவல் சேகரிப்பு நடக்கக்கூடும். இதற்காக 80,000 பவுன்களை பூர்வாங்கச் செலவுக்கும், 7,000 பவுன்களை ஆண்டுச் செலவுக்கும் ஒதுக்க மேற்படி கவுன்சில் நிச்சயித்திருக்கிறது.

அணு-மின்சார உற்பத்தி இயந்திரம் தயாரிப்பு

தொழிற்சாலைகள் கூட்டு முயற்சி

அணுசக்தி உற்பத்திச் சாதனங்களைத் தயாரிப்பதில் அனுபவமுள்ள, பிரிட்டனைச் சேர்ந்த சி. ஏ. பார்ஸன் அண்டு கம்பெனியின் தலைமையில், எட்டுத் தொழிற்சாலைகள் கூட்டாகச் சேர்ந்து அணு-மின்சார சாதனங்களை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

கோவில்பட்டி ஆலைத் தொழிலாளருக்கு வீடுகள்

நெல்லை மாவட்டம் கோவில்பட்டியில், 'லாயல் துணி ஆலை'யிலுள்ள சுமார் 150 ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித் தர ரூ. 3 லட்சம் செலவில் ஒரு திட்டம் கூடிய சீக்கிரத்தில் மேற்கொள்ளப்படும் என்று தெரிய வருகிறது.

அதன்படி தலா ரூ 2,000 செலவில் 150 வீடுகள் கட்டப்படும் என்றும்; அவற்றில் சுமார் 40 - வீடுகள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஊழியர்களுக்குத் தரப்படும் என்றும் தெரிகிறது.

தொழில்கள் தேசீயமயமாவதில் சோஷலிசம் இல்லையாம்!

சர்க்கார் துறை ஒழுங்கு பெற தனியார் துறை போட்டி வேண்டுமாம்!

பண்டித நேருவின் வியாக்கியானம்

புதுடில்லி, மே. 18—

"தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் தொழில், வர்த்தக நிறுவனங்களை நாம் இப்போது சர்க்கார் உடைமையாக்கினுல் அதன் உடனடி பலன், உற்பத்தியில் பெரும் நஷ்டமேற்படுவதாகவே இருக்கும்;

"நம்முடைய இன்றைய நிலையில், நாம் தனிப்பட்டவர்களிடமிருக்கும் தொழில்களை ஏற்று நடத்த முடியாதவர்களாயிருக்கிறோம்; நம்மால் அது எப்போது முடியும் என்பதையும் என்னுல் சொல்ல முடியாது; நாம் அவற்றை மேற்கொள்ளுவதற்கு நீண்ட நாட்களாகலாம்."

—என்று, பண்டித நேரு, அகில இந்திய காங்கிரசின் கூட்டத்தில் பேசியதாக காங்கிரசின் திங்களிருமுறை வெளியீடான 'பொருளாதார விமர்சனம்' என்ற இதழில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"தேசத்திற்குச் சொந்தமான தொழில், வர்த்தக நிறுவனங்கள், முறையாக இயங்குவதற்குக்கூட, தனிப்பட்டவர்களால் இயக்கப்படும் அத்தகைய நிறுவனங்களின் போட்டி தேவை என நான் தனிப்பட்ட முறையில் எண்ணுகிறேன்.

"தனியார் துறையை அனுமதித்துவிட்டு, பின் அவை இயங்க முடியாமல் அவற்றிற்கு ஊறு விளைவிப்பது முட்டாள்தனமானதாகும்; அம்மாதிரி செய்வது கொள்கையற்றதாகும்; அதனுல் நாம் நம்முடைய சொந்தக் கொள்கைகளுக்கே ஊறு தேடியவர்களாவோம்.

"தொழில்களில் தனியார் துறையை அனுமதிப்பதா, கூடாதா என்பது வேறு விஷயம்; அதுபற்றி எவரும் விவாதிக்கலாம்.

"தொழிலில், தனியார் துறை இருக்கவேண்டுமென நான் தனிப்பட்ட முறையில் எண்ணுகிறேன். அது மட்டுமின்றி, தனியார் துறையை ஊக்குவிக்கவும் வேண்டும் என்று எண்ணுகிறேன். இதனுல் சர்க்கார் துறைத் தொழில்களுக்குத் தரும் ஊக்கத்தை தனியார் துறைக்குத் தருவதாகப் பொருள் அல்ல.

"சர்க்கார் துறைதான் எப்போதும் முதலாவதாக இருக்கும்; தனியார் துறையைக் காட்டிலும் வேகமாக வளரவும் செய்யுமென நான் நம்புகிறேன்; அப்படி வளர்ந்து சர்க்கார் துறைதான் இந்தியாவின் பொருளாதாரத்தினை நிர்ணயிக்கும்; இதர துறைகள், சர்க்கார் துறையை ஒட்டி தன்னை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

"தேசிய மயமாக்குதல் என்பது ஒரு மந்திரச் சொல்லாகிவிட்டது; அதற்கு விபரீதமான—அபூர்வமான பொருள்களும் கூறப்படுகிறது; மக்களும், 'தொழில்களை எல்லாம், நஷ்டஈடு கொடுத்தோ நஷ்டஈடு இன்றியோ தேசியமயமாக்கினுல்தான் சோஷலிசம் நடைமுறைக்கு வரும்,' என்றெண்ணுகின்றனர்; இது முற்றிலும் தவருன எண்ணமாகும். இரண்டினையும் ஒன்ருகக் குழப்பக் கூடாது.

"கம்யூனிஸ்டு நாடுகளில் இந்தக் கொள்கையினுல் உண்டாகும் கஷ்டங்களைக் காணலாம்; அவர்களுக்கு, தொழில்களை எல்லாம் தேசீயமயமாக்குவதற்கு எவ்விதத் தடையுமில்லை. மேலும், எதும் நஷ்டஈடு தராமலேயே அவற்றை எடுத்துக்கொள்ள முடியும்; என்ருலும், அவர்கள் அவ்வாறு செய்வதில்லை; அப்படி தேசிய மயமாக்கினுல், அவர்கள் பலகாலம் அவதிப்படுகின்றனர்.

"சீனு உள்பட கம்யூனிஸ்டு நாடுகளில் தொழில்களை மிகச் சிறிய அளவிலேயே துவக்கினுர்கள்; இந்தியாவைக் காட்டிலும் மிகச் சிறிய அளவிலேயே துவக்கினுர்கள்; ஊக்கமூட்டுவதின் மூலம், தனியார் துறையில் வலிமையான ஒரு கொள்கையைப் புகுத்தினர்; ஏனெனில், அவர்கள், எல்லாத் துறையிலும் முன்னேற்றத்தை வேண்டினர்; அவசியமாக இருந்தது உற்பத்திதான்.

"தேவையானதெல்லாம், அதிகமான செல்வத்தை உற்பத்தி செய்வதுதான்; செல்வப் பெருக்கமின்றி, சோஷலிசம் இருக்க முடியாது.

"சிலரிடம் இப்போதிருக்கும் செல்வத்தைத் தட்டிப் பறித்து விடுவது மட்டும் போதாது; செல்வம் பெருக வேண்டும்; தொழில், விவசாய மூலமாக உற்பத்தி பெருகினுல்தான் செல்வம் பெருகும்.

"சோஷலிசம் பற்றி கட்டுப்பாடான பழைய கால கருத்து இப்போது இந்தக் காலத்திற்குப் பயன்படாது.

"தொழிற்சாலைகளை சர்க்கார் மேற்கொள்ளுவதென்பது எனக்குப் பிடிக்கவில்லை; சரியான நேரத்தில் பாங்கிகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், சுரங்கங்கள் இவைகளை சர்க்கார் வசமாக்குவதே எனக்குப் பிடித்திருக்கிறது. இவைகளெல்லாம் அடிப்படையானவைகள் என்பதினுலேயே இவற்றை சர்க்கார் எடுத்துக்கொள்வதை நான் விரும்புகிறேன்; ஆனல், எப்போது எடுத்துக் கொள்வது என்ற பிரச்சினை இருக்கிறது."

பின்லாந்தில் பூச்சி மழை!

காற்றும்மழையும் செய்த அற்புதம்

ஹெல்சிங்கி, மே 17—

மத்திய பின்லாந்து பகுதியைச் சேர்ந்த இச்ணுமெய்சி நகரில், சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு பூச்சி மழை பெய்திருக்கிறது.

'ஆண்டவனின் அற்புதம்' என்பர், மத எத்தர்கள்!

'மந்திரத்தின் மகிமை' என்பர், மாந்திரீகர்கள்!

ஆனல், உண்மையோ இவைகளுக்கு அப்பாற்பட்டதாகும். மேற்படி நகரைச் சுற்றி காய்ந்த புற்றரை இருக்கிறது. பலமான சுழல் காற்று வீசிய காரணத்தால் அப் புற்றரையில் இருந்த புழு பூச்சிகளில் ஆயிரக்கணக்கானவை அந்தரத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டன. மழை பொழிந்ததும், விண்ணில் மிதந்து கொண்டிருந்த அப்பூச்சிகள், மழையுடன் கலந்து நகரில் வீழ்ந்தன.

புல் தரையில் கிடந்த பூச்சிகளை பலத்த காற்றும், பெரும் மழையும் தூக்கிக் கொண்டுவந்து இச்ணுமெய்சி நகரில் இறக்கிவிட்டுள்ளன!

இழை நுணுக்கங்களை அறிய 'ரடார்'

தறியில் ஓடும் 'பாவு' இழைகளிலுள்ள பிசிறுகளை அறியவும், பஞ்சோடிய இடங்களைக் கண்டுபிடிக்கவும் 'ரடார்' சாதன அமைப்பு முறையில் ஓர் கருவியை மான்செஸ்டரிலுள்ள ரேயான் சோதனைச்சாலை தயாரித்திருக்கிறது.

இந்தக் கருவியிலுள்ள மின்னணு பூதக்கண்ணுடி இரண்டு லட்சம் பங்கு பெரியதாக ஒரு பொருளை எடுத்துக்காட்டக் கூடியது. இந்தக் கருவியை தறியில் இணைத்து 'பாவு' ஓட்டினுல், எதிரேயுள்ள திரையில் 'பாவு' ஓட்டம் தெரியும்; அதிலிருந்து கோளாறைக் கண்டுபிடித்துவிட முடியும்!

1954-ல் இந்தியாவிலிருந்து சீனுவுக்கு ஏற்றுமதியான சரக்குகளின் மதிப்பு ரூ 1,77,12,000; சீனுவிலிருந்து இறக்குமதியானவையின் மதிப்பு சுமார் ரூ. 94,41,000,

திபெத்தில் 'சோஷலிசம்'

50 ஆண்டுகளில்கூட நிலைபெற முடியாது

சீனப் பிரதமர் கருத்து

புதுடில்லி, மே 17—

"கம்யூனிசமோ, அல்லது சோஷலிசமோ இன்னும் 50 ஆண்டுகளுக்கு திபெத்தில் இடம் பெற முடியாது,"

என்று, சீனப் பிரதமர் சௌ-யென்-லாய் கருதுகிறாராம்.

இந்த தகவலை பிரதமர் நேரு அண்மையில் நடைபெற்ற அகில-இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் குறிப்பிட்டதாகக் கூறப்பட்டது.

பிரதமர் நேருவின் முன்னிலையில் சீனப் பிரதமர் சௌ-யென்-லாயிடம் ஒருவர், "நீங்கள் திபெத்தில் கம்யூனிசத்தைப் புகுத்தப் போகிறீர்களா?" என்று கேட்டாராம்.

சௌ சிரித்துக்கொண்டே கூறினாராம்:—

"இந்தக் கேள்வியைக் கேட்கும் உங்களுக்கு, திபெத்தின் நிலை பற்றியோ, அல்லது சோஷலிசம் பற்றியோ தெரியாது என்று நினைக்கிறேன்;

"திபெத்தில் கம்யூனிசமோ, சோஷலிசமோ புகுத்தப்பட முடியாது. அங்கு அவை இடம் பெற இன்னும் 50 ஆண்டுகளோ 100-ஆண்டுகளோ ஆகலாம்;

ஏனெனில், எத்தனையோ அவசியமான பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருக்கும்; ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொண்டு, 'அதுதான் சோஷலிசம்' எனக் கூற முடியாது," என்றார்.

அவர்களுக்குள்ளேயே அதிருப்தி!

'செயல் முறை'களில் ஈடுபட அழைப்பு

"தென்னாப்பிரிக்காவில், நிற வெறி கொண்டலையும் வெள்ளை சர்க்காரை எதிர்த்து முறியடித்து, மீண்டும் 'சுதந்திரம்' என்ற காற்றை சுவாசித்து உட்கொள்ளும்வரை போராட வேண்டும்,"

என்று, தென்னாப்பிரிக்க எதிர்க்கட்சியான 'ஐக்கியக் கட்சி'யின் தலைவர் ஜாக்கப் ஸ்டிராஸ் தென்னாப்பிரிக்க மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளாரெனக் கூறப்படுகிறது.

தென்னாப்பிரிக்க செனட் சபையில் தங்கள் கட்சியின் பெரும்பான்மையை மேலும் பெருக்குவதற்காக தெ. ஆ. பிரதமர் ஸ்ட்ரீடம் சர்க்கார் கொண்டுவந்த மசோதாவை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதற்காக ஏற்படுத்திய இயக்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

"தென்னாப்பிரிக்க மக்கள் தங்கள் அடிமைத்தனத்தினின்றும் விடுபட விழித்து எழவிருக்கிற காலம் அண்மையிலேயே இருக்கிறது; இதுதான் செயல் முறைகளில் ஈடுபட வேண்டிய காலம்; இந்த நேரத்தில்தான் நாம், இதற்கு முன்னர் கண்டிராத அளவிற்கு வலிமையுடன் போராட வேண்டும்; தென்னாப்பிரிக்க மக்கள், இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களது உண்மையான 'சொரூபத்'தைக் காட்டாவிட்டால், பாராளுமன்றத்தில் நடைபெற்று வரும் போராட்டங்கள் ஒரு சில வாரங்களில் ஓய்ந்துவிடும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர், செனேட்டின் இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள் எல்லோருமே தங்கள் கட்சியில் சேர்ந்துவிடவேண்டுமென்று தாம் கேட்டுக்கொள்ளாமல், தென்னாப்பிரிக்காவை ஆதிக்க-நிற வெறியர்களின்கைப்பிடியிலிருந்து காப்பாற்றுகின்ற 'புனிதப் போரி'ல் சேருமாறுதான் அழைப்பதாகவும், தீமைக்குப் பதில் நன்மையையும், சர்வாதிகாரப் போக்கிற்குப் பதில் நீதியையும் கற்பித்த மூதாதையர்களின் பாதையில் தாங்கள் நடந்து செல்ல வேண்டுமென்று சூளுரை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

'உதவி வேண்டாம்— உபத்திரவம் தராதீர்!'

இந்திய சர்க்கார் போக்கிற்கு நரேந்திர தேவ் கண்டனம்

கோவா பிரச்சினையில், ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியும், சர்க்காரும் கடைப்பிடித்துவரும் கொள்கை முறைகளைக் கண்டித்து மக்கள் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் ஆச்சாரியா நரேந்திர தேவ் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறார்:—

"போர்ச்சுகீசியப் பகுதிகளில் நிலவும் நிலைமைகள் வரவர மோசமாகிக் கொண்டு வருகின்றன—அங்கே பயங்கரமான ஆட்சி தலைவிரி தாண்டவமாடுகிறது; இந்தப் பிரச்சினையில் இந்திய சர்க்கார் செய்வது என்னவெனத் தெரியாமல் திண்டாடுவது வியப்பிற்குரிய ஒன்றாகவேதான் இருக்கிறது. போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியத்தின் போக்கு இந்தியாவிற்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு சவாலைத் தவிர வேறல்ல; இவ்வளவிருந்தும், ஆளும் கட்சியோ அல்லது சர்க்காரோ நிலைமையை முற்றிலும் நன்றாக உணர்ந்துகொண்டதாகவே தெரியவில்லை."

"கோவாவில் ஏகாதிபத்தியப் பிடிப்பை எதிர்த்துப் போரிடுகிறவர்களுக்கு — விடுதலை வீரர்களுக்கு—இந்திய சர்க்கார் உதவாவிட்டாலும் உபத்திரவமாவது செய்யாமல் இருப்பார்கள் என்று நம்புகிறேன்,"

என்றும் அவர் இறுதியாகத் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தானில் உருக்கு ஆலை

ரூபாய் 900 லட்சம் செலவில் அமைகிறது

ஜெர்மன் கம்பெனியுடன் ஒப்பந்தம்

சுமார் ரூ. 900 லட்சம் செலவில் ஆண்டுதோறும் 3,50,000 டன் கச்சா உருக்கு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ பாகிஸ்தான் தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷனுடன், மேற்கு ஜெர்மனியிலுள்ள 'குருப்ஸ்' நிறுவனம் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாம்.

தொழிற்சாலை நிர்மாண வேலை இந்த ஆண்டு துவங்கும் என்று தெரிய வந்துள்ளது.

இத்தொழிற்சாலைக்கான பாகிஸ்தான் எஞ்சினீயர்களையும், தொழிலாளர்களையும் 'குருப்ஸ்' நிறுவனத்தார் பயிற்றுவிக்க ஒப்புக்கொண்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

தஞ்சை மாவட்ட தி. மு. கழகம்

நிறைவேறிய தீர்மானங்கள்

15—5—55 காலை 10 மணியளவில், அதிராம்பட்டினம் கழகப் பணிமனையில் தஞ்சை மாவட்டக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடைபெற்றபோது, மாநில மாநாட்டுக்கு மாவட்டத்தின் சார்பில் ரூ. 2,000 தருவதென்றும், இந்த நிதிக்காக மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சிற்றூர்க் கிளையும் ரூ. 10-க்குக் குறையாமலும், ஒவ்வொரு பேரூர்க் கிளையும் ரூ 25-க்குக் குறையாமலும், ஒவ்வொரு நகரக் கிளையும் ரூ. 75-க்குக் குறையாமலும் ஜூன் மாதம் முதல் தேதிக்குள்ளாக மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவிட வேண்டும் என்றும், மாவட்டக் கழகத்தின் சார்பில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வசதிப்பட்ட ஒரு நாளில் கும்பகோணத்தில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்துவதுடன், அன்றே மாநில மாநாட்டுக்கான நிதியை வழங்குவதென்றும், மாவட்டத்தில் நடைபெறும் தி. மு. கழக சம்மந்தப்பட்ட (பொதுக் கூட்ட வசூல் தவிர்த்து) நாடக, காலட்சேப, பொது நிகழ்ச்சி நிதி வசூல், மாவட்டச் செயலாளரின் அனுமதி பெற்றே நடைபெற வேண்டும் எனவும், காரைக்கால் உள்ளிட்ட 10 வட்டங்களிலும் 29—5—55-ல் தேர்தல் ஆணையாளர்களைக் கொண்டு தேர்தல் நடத்துவதென்றும், அறந்தாங்கி, ஒரத்தநாடு, சீர்காழி வட்டங்களைப் பக்கத்து வட்டங்களோடு தற்காலிகமாக இணைத்துக்கொள்வதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், மாவட்டத்தில் வளர்ந்துவரும் விவசாயப் பிரச்சினைகளைக் கண்டறியவும், கழக இலட்சியங்களை ஒத்துக்கொண்டுள்ள விவசாயிகளை நிறுவன ரீதியாக ஒன்றுதிரட்டவுமான வழிவகைகளைத் தெரிந்து, தகவல்களைச் சேகரித்து, அடுத்த மாவட்டக் குழுக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்க ஒரு துணைக் குழு நியமிக்கப்பட்டும், இத்துணைக் குழுவுக்கு தோழர் சி. ஜெம்பு அவர்களைச் செயலாளராக நியமித்தும், தி. மு. கழகப் பொதுச் செயலாளராகக் கடந்த 6 ஆண்டுகளாகப் பெரும் பணியாற்றிய தோழர் அண்ணாதுரை அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டியும், பொதுச் செயலாளருடைய கருத்து வழி நின்று மாவட்டக் குழு பணியாற்றும் என்று உறுதிமொழி தந்தும், முன்னாள் மாவட்டச் செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

மற்றும், தோழர் ஏ. ஒய். அருளானந்தசாமி அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

ஆசியர்களுக்கு கல்வி வசதி

10,20,000 பவுன் ஒதுக்கல்

கென்யாவில், ஆசியர்களுடைய கல்வி முன்னேற்றத்திற்காக 1954—57 அபிவிருத்தித் திட்டத்தில், 10,20,000 பவுன் ஒதுக்கியிருப்பதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

ஐரோப்பியர் கல்வி வசதிக்காக 7,27,000 பவுன்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

கல்வி நிலையக் கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி வருமாறு:—

ஆசியர்:	6,65,000 பவுன்
ஐரோப்பியர்:	6,52,000 பவுன்
ஆப்பிரிக்கர்:	3,29,000 பவுன்
அராபியர்:	41,000 பவுன்

மனித உழைப்பை ஒதுக்கி இயங்கும் இயந்திர சாதனங்கள்

தொழிலாளர்கள் 'வாழ்க்கைத்தரம்' பாதிக்கப்படுமா?

மனித உழைப்பின் மதிப்பு மாறி, பொத்தானை அழுத்தியதும் தானே இயங்கி, இட்ட வேலையைச் செய்யும் இயந்திரங்கள் நிறைந்த தொழிற்சாலைகள், பிரிட்டனில் ஏற்படவில்லை; ஆனாலும், மனித உழைப்பை ஒதுக்கிவிட்டு, தானே இயங்கும் இயந்திர சாதனங்கள் பல, இரும்பு, கண்ணாடி, எண்ணெய், ரசாயனம், பொறி இயல், பத்திரிகை, தந்தி போன்ற தொழில்களில் இடம் பெற்றுவிட்டன.

தானே இயங்கும் இயந்திரங்களின் மதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது; இதனால் பல புதிய பிரச்சினைகளும் எழுந்துள்ளன. இச்சாதனங்கள்பெருகுவதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமா?—தொழிலாளர் வருமானத்தைப் பாதிக்குமா?—வேலை நேரத்தைக் குறைத்துவிடும் நிலை வளருமா?—அல்லது தொழிலாளர் வாழ்க்கை நிலை உயரச் செய்யுமா?—இம்மாதிரியானபிரச்சினைகள் ஆராயப்பட்டு வருகின்றன.

பிரிட்டிஷ் தொழிற் சங்கக் காங்கிரஸ், 80,00,000 உறுப்பினர்களுள்ள வலிமையான ஒரு நிறுவனம். தானே இயங்கிகளால் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய, அந்தத் தொழிற் சங்கக் காங்கிரஸ், ஓர் விஞ்ஞான ஆலோசனைக் குழுவை நியமித்திருக்கிறது.

தானே இயங்கும் இயந்திர சாதனங்களை விரிவாகக் கையாளுவதால் எழக்கூடிய பிரச்சினைகளை எடுத்துக்காட்டிவிட்டு, 'பிரிட்டிஷ் தொழிற்சாலைகளில் தானே இயங்கும் இயந்திரங்கள், என்றோ ஒரு நாள் இடம் பெற்றுவிடும்,' என்று அக்குழுவின் பரிசீலனை அறிக்கை கூறுகிறது.

தொழிலாளர் நலனைக் காப்பதில் தனக்குள்ள உரிமையையும், அக்கரையையும் விட்டுக்கொடுக்கத் தொழிற் சங்கக் காங்கிரஸ் தயாராக இல்லையாம். தானே இயங்கும் இயந்திரங்கள் தொழிற்சாலையை ஆக்கிரமித்துக்கொண்டால், தொழிலாளர்களுக்கு வேலையில்லாது போகும்; சாதாரணத் தொழிலாளர்கள், எடுபிடியாட்கள், குமாஸ்தாக்கள் முதலியவர்கள் பிழைப்புக்காக வேறு தொழில்களை நாடவேண்டும்; அதற்கான பயிற்சியும் பெறவேண்டும். வேலையற்றுத் திரியும் தொழிலாளர்கள் அனைவருக்கும் மாற்றுத் தொழில் தேடித் தருவது சுலபமான காரியமல்ல; தேசிய ரீதியில் பார்த்தால், இது ஒரு முக்கியமான பொருளாதாரப் பிரச்சினையாகும். அதுதவிர, தானே இயங்கும் இயந்திரங்களை உபயோகிக்கும் நோக்கத்திற்கும் பயனில்லாது செய்துவிடும். இப்படிப்பட்ட புதுச் சிக்கல்களுக்கு இடம் கொடுக்காதபடி மாறுதல்களைச் செய்யவேண்டுமென்பதே காங்கிரசின் நோக்கமாம்.

மே தின விழா பொதுக்கூட்டங்கள்

க. புதுப்பட்டி

10—5—55-ல், தோழர் எஸ். அரங்கராசு தலைமையில் விழா நடைபெற்றது. இரவு 8 மணிக்கு ஊரின் முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வலம் நடைபெற்றது.

திருப்பரங்குன்றம்

8—5—55 மாலை 4 மணியளவில், திராவிடர் பகுத்தறிவு மன்றத்தின் சார்பில், ஊர்வலமும், விழாப் பொதுக் கூட்டமும் தோழர் சொ இராமன் தலைமையில், குறவக்குல மண்டபம் முன்பு நடைபெற்றது. தோழர்கள் சமதர்மம், கே. எஸ். சந்தானம், மு.: வசனப்பித்தன், இல. அ. நாதன், ச. அக்கினிராசன் ஆகியோர் தி. மு கழகம் மே தின விழா கொண்டாடுவதின் நோக்கத்தை விளக்கிப் பேசினர்.

பெத்தநாய்க்கன்பாளையம்

9—5—55 மாலை 7 மணிக்கு இவ்வூர் (ஆத்தூர் வட்டம்) தி. மு. கழகச் சார்பில், மே தின விழாப் பொதுக் கூட்டம் தோழர் ஏ. ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம் குப்புசாமி, எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ, கிற்றுளி-சுப்பிரயமணியம் ஆகியோர் தென்னாட்டுத் தொழிலாளர் நிலை பற்றி சொற்பொழிவாற்றினர்.

வெள்ளைக்கோட்டை

8—5—55 மாலை 5 மணிக்கு அருப்புக்கோட்டை — வெள்ளைக்கோட்டை பாரதிதாசன் தெருவில் பகுத்தறிவு மன்றச் சார்பில், தோழர் எஸ். பி. சாமி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தலைவர் தமது முன்னுரையில், 'மே தினமும் பகுத்தறிவு மன்றமும்' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றிய பின், தோழர் அ. சுப்பிரமணியம் கழகக் கொடியேற்றி வைத்து மே தினம் பற்றி விரிவுரையாற்றினார். இறுதியில் சிறுவருக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

மேலாண்மறை நாடு

10—5—55-ல் தோழர் எம். மாரியப்பன் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எம். இராமசாமி. எஸ். செல்லையா, கே. குருசாமி, டி. சின்னதுரை ஆகியோர் மே தினம் குறித்து விரிவுரையாற்றினர். ஊர்வலமும் நடைபெற்றது.

பெத்தநாய்க்கன்பட்டி

11—5—55-ல், பழனி வட்டம், பெத்தனாய்க்கன் பட்டியில் மே விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவ்வூர் பொதுச் சாவடியில் தோழர் கண்ணுசாமி அவர்களால் கழகக் கொடியேற்றி வைக்கப்பட்டது. அன்று காலை கிராமத்தின் எல்லா பகுதிகளுக்கும் விழா ஊர்வலம் சென்றது. இறுதியில் சிறுவருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

அருப்புக்கோட்டை

12—5—55 இரவு 8 மணிக்கு தியாகராயர் வாலிபர் சங்கத்தின் முன்பாக, தோழர் ச. அ. முத்துச்சாமி தலைமையில், நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் பி. பி. என். நல்லதம்பி, சோ. முத்துராமலிங்கசேது ஆகியவர்கள் பேசியபின், இறுதியாகத் தோழர் எம். எல். இராமசாமி 'மே தினமும், தி. மு கழகமும்' என்னும் பொருள் பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

மம்சாபுரம்

8–5–55-ல், தோழர் சு. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தின்போது தோழர் அ. கனியப்பன் கழகக் கொடி ஏற்றிவைத்துச் சொற்பொழிவாற்றினார். பின்னர் புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டியும், அவருக்கு கிளைக் கழகச் சார்பில் வரவேற்பு தருவதெனவும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

காஷ்மீர் பிரச்னை நீளுகிறது

வெற்றி காணாத வெறும் பேச்சுவார்த்தைகள்!

பாக்.-இந்திய பிரதமர்களின் கூட்டறிக்கை

தங்களுக்கிடையே உள்ள தகராறுகளுக்கு முடிவு காணும் நோக்குடன், இந்தியா—பாகிஸ்தான் நாடுகளின் பிரதமர்கள் புதுடில்லியில் கூடிப் பேசினர், கடந்த ஐந்து நாட்களாக. நல்லெண்ணத்துடன் பிரச்சினைகளை நாடியதாகக் கூறினர். முடிவில், பிரச்சினைகளுக்கு முடிவேதும் காணாத நிலையிலேயே பேச்சுக் கடையை மூடினர்.

கடந்த 5 நாட்களாக நடத்திய பேச்சு வார்த்தைகளின்போது தெரிவிக்கப்பட்ட பல்வேறு விஷயங்களையும் இரு சர்க்கார்களும் முழுவதுமாகப் பரிசீலித்த பின்னர், இன்னொரு முறை சந்தித்துப் பேசப் போவதாக இரு நாட்டுப் பிரதமர்களும், வழக்கம்போல விடுத்துள்ள கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

பேச்சு வார்த்தைகள், நேச முறையிலும் மிக விரிவாகவும் நடைபெற்றன. இரு நாடுகளுக்கும் பொதுவான பல விஷயங்கள் பற்றிப் பேசப்பட்டது. பிரச்சினைகளுக்கு முடிவு காண சகல வழிகளிலும் முயற்சிக்க வேண்டும் என்ற ஆவல் இருதரப்பாரிடமும் இருந்தது என்று, அந்தக் கூட்டறிக்கை கூறுகிறது.

இரு நாட்டுப் பிரதமர்களுடன், பேச்சுவார்த்தைகளின்போது, இந்தியா சார்பில் மௌலானா ஆசாத், பண்டித பந்த் ஆகியோரும், பாக். சார்பில் இஸ்கந்தர் மிர்ஜாவும் கலந்து கொண்டனர்.

இவையன்றி, இந்தியா, பாகிஸ்தான் நாடுகளின் உள்நாட்டு மந்திரிகளான, பண்டித கோவிந்த வல்லப பந்த், இஸ்கந்தர் மிர்ஜா ஆகியோரும் தனித்த முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கின்றனர். அதை ஒட்டி, சில உடன்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

பிரதமர்களின் உரையாடலின் போது, காஷ்மீர் பிரச்சினையின் எல்லா அம்சங்களும் விரிவாக விவாதிக்கப்பட்டன. அதுபோது தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை இரு தரப்பாரும் பூரணமாக பரிசீலித்த பிறகு, பின் ஒருமுறை தொடர்ந்து உரையாடுவது என முடிவாகியது என்றும் அந்தக் கூட்டறிக்கை கூறுகிறது.

★

'தீராத நோய் தீர நாள் தேவை'

பேச்சுவார்த்தைகள் பற்றி முகம்மது அலி

"தீராத நோய் விடாப்பிடியாகப் பிடித்தால், ஒரே நாளில் அதை குணப்படுத்திவிட முடியாது; அதற்கு சிறிது நாள தேவைப்படும். அதைப்போல, இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையேயுள்ள தகராறுகளுக்கு உடனடியாகத் தீர்வு காண முடியவில்லை.

"பேச்சுவார்த்தைகள் நல்லெண்ணத்துடனும், தோழமை உணர்வுடனும் நடைபெற்றன என்பது எனக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கின்றன.

"ஏதேனும் ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டும் என்பதாக இரு தரப்பாரின் பேரவா இருந்தது. எனவே, உடன்பாட்டிற்கான எல்லா வகைகளையும் ஆய்ந்தறிந்தோம். ஆனால், நான்கு நாட்களில் பேச்சுவார்த்தையை முடித்துவிட முடியவில்லை. ஆகையால், தொடர்ந்து பின்பு பேச இருக்கிறோம்,"

—என்று, இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்ட பாக். பிரதமர் முகமது அலி குறிப்பிட்டிருக்கிறார்.

"காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் காஷ்மீர் மக்களின் விருப்பத்தை அறிய வேண்டியது மிக அவசியமானதாகும். பாகிஸ்தானும், இந்தியாவும் மட்டுமல்ல இதில் ஈடுபாடுடையவர்கள். அந்தப் பகுதி மக்களின் விருப்பத்தை அறிய உள்ள பல வழிகளில் ஏதேனும் ஒன்றின்படி, அவர்கள் கருத்தறிய வேண்டும்."

காஷ்மீர் பிரச்சினை எப்போது தீரும் என்று காலம் குறிப்பிட முடியுமா என்று கேட்டபோது, தேதி எதையும் குறிப்பிட தாம் விரும்பவில்லையென பாக் பிரதமர் கூறியிருக்கிறார்.

'குற்றவாளிகள்' மீது நடவடிக்கை

பாக். பிரதமர் தரும் உறுதிமொழி

புதுடில்லி, மே 18—

ஒரு இந்திய இராணுவ அதிகாரி உட்பட 12 இந்தியர்கள் கொல்லப்பட்ட மாகோவால் சம்பவத்திற்குக் காரணமாயிருந்த எந்தக் குற்றம் செய்த நபரையும், பாகிஸ்தான் சர்க்கார் காப்பாற்ற முயற்சிக்காதெனவும், குற்றவாளி எனக் கண்டு பிடிக்கப்பட்ட அதிகாரி மீது மிகத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாகிஸ்தான் பிரதமர் முகம்மதலி கராச்சிக்குப் புறப்படுமுன் கூறியதாகத் தெரியவருகிறது.

அறப்போர் வீரர் மீது போர்ச்சுகீசிய போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

நால்வருக்குக் காயம்; பலர் கைது!

தோடாமார்க்(கோவா), மே. 18—

கோவாவிலுள்ள போர்ச்சுகீசிய ஏகாதிபத்திய சர்க்காரை எதிர்த்து, கோவா விடுதலை கோரி சத்தியாக்கிரகம் செய்யவந்த சத்தியாக்கிரகிகள் மீது கோவா போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர். துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக நான்கு சத்தியாக்கிரகிகளுக்கு துப்பாக்கிக் குண்டுக் காயம்பட்டிருக்கிறது.

சத்தியாக்கிரகத் தொண்டர்களைத் தலைமை தாங்கி நடத்திவந்த சேனாபதி பாபட், கோரே ஆகியோர் போலீசாரால் 'மிருகத்தனமாக' தாக்கப்பட்டு, நையப் புடைக்கப்பட்டனர் என்றும், 75 வயதுடைய சேனாபதி பாபட்டின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும், கோவா போலீசார் அவரது குடுமி மயிரைப் பிய்த்து எறிந்தனர் என்றும் கூறப்படுகிறது. இவர்கள் தவிர, மற்றும் 7-சத்தியாக்கிரகிகள் காயமடைந்துள்ளனராம்.

சேனாபதி பாபட், கோரே ஆகியோர் தலைமையில் சென்ற அந்த 54 சத்தியாக்கிரகிகள் அடங்கிய அதுக் குழு ஒன்று கோவாவில் புகுந்தது. இவர்கள் கோவா பிரதேசத்திற்குள் நுழைந்து இரண்டு பர்லாங் தூரம் சென்றதும் போலீசார் அவர்களை வழிமறித்து, மும்முறை ஆகாயத்தை நோக்கிச் சுட்டதாகவும், தொண்டர்கள் மீறி முன்னேறிச் செல்லுகையிலேயே போலீசார் இறுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது.

"கோவா சத்தியாக்கிரகிகள் மீது போர்ச்சுகீசிய சர்க்காரின் 'மிருகத்தனமா'ன அட்டூழியங்கள் வரவர அதிகரித்துக்கொண்டே இருக்கிறது" என்று, கோவா விடுதலைக் குழுவின் அமைப்பாளர்களில் ஒருவரான டாக்டர் லங்கா சுந்தரம் எம்.பி. என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கிராமவாசிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம்

சவந்தவாடி—

குன்காலி எனும் கிராமத்தில், கோவா தேசியவாதிகளை விரட்டியடிக்க கோவா போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

இதனால் ஏற்பட்ட கலவரத்தின் போது ஒரு போலீஸ்காரர் காயம்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின், மரணமுற்றார்.

இந்தப் போலீஸ்காரரின் மரணத்தைக் காரணமாகக் காட்டி, பக்கத்திலுள்ள கிராமவாசிகளை போலீசார் துன்புறுத்தி வருகின்றனராம்.

ஆசாத் கோமண்டல தளத்தைச் சேர்ந்த தொண்டர்கள் சிலர் ஸ்டாபென் எனும் கிராமத்தைக் கடந்து சென்றுகொண்டிருக்கையில், அவர்கள் மீதும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம். ஆனால் பலத்த காயம்படவில்லை என்று கூறப்படுகிறது.

சுடுவதற்கு உத்தரவு!

கோவா எல்லையை யாராவது கடப்பதாகச் சந்தேகத்திற்கிடமிருந்தால் அவர்களைச் சுட்டுத் தள்ளும்படி கோவா போலீசாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்!

அரசியல் கைதிகளை—அதிலும் குறிப்பாகப் பெண்களை அதிகாரிகள் மிருகத்தனமாக நடத்துகின்றனராம். கைது செய்யப்பட்டு சிறைக்கு அழைத்துச் செல்லப்படுகையில், ஆஷா பாக்டே எனும் பெண்மணி போலீசாரால் உதைக்கப்பட்டாராம்.

சென்ற மாதத்தில் சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்ட கோவா அரசியல்வாதிகளுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

இதுதவிர, சவந்தவாடியிலிருந்து கோவா எல்லை முழுவதையும் போலீஸ் அதிகாரிகள் மூடிவிட்டனராம்.

எல்லைக்குள் நுழையும் சத்தியாக்கிரகிகளைத் தடுக்க 2000 துருப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

தொழிலாளர் உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

சங்கத் தலைவரின் அறிக்கை

சென்னை, மே 17—

சென்னை, சி. கோபால் நாயகர் அண்ட் சன் பேசின் பவுண்டரி தொழிலாளர்களுக்குக் கொடுத்து வந்த 3 மாத போனசை, கடந்த நான்காண்டுகளாக நிறுத்திவிட்ட தொழிற்சாலை நிர்வாகத்திற்கு எதிராகக் கடந்த 12-ந் தேதியிலிருந்து தொழிலாளர்கள் அமைதியான முறையில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

மேற்படி தொழிற்சாலை சங்கத் தலைவர் திரு. ஜி எம். மதுரையார், தங்கள் கோரிக்கை பற்றி கீழ்க்கண்டவாறு ஒரு சுற்றறிக்கை விடுத்துள்ளார்:—

"தொழிலாளர்கள் கோரிக்கைகளை சர்க்கார் கவனிக்காதது காரணமாகவே அவர்கள் இந்த உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்; அரசாங்கம் இதில் தலையிட்டு, இத்தகராறை தொழில் நிதிமன்றத்திற்கு விட்டிருக்குமேயானால் இவை நடைபெற்றிருக்காது.

"சர்க்கார் உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும். நிர்வாகி முதலாளிகளும் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வரவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்."

1954-ல், 3 லட்சத்து 4 ஆயிரம் பவுண்டு எடையுள்ள தையல் நூலும், பின்னல் நூலும் பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது; 1953-ல், 10,68,00,000 பவுண்டு இறக்குமதி செய்யப்பட்டது.

கத்தியைக் காட்டி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சிந்திவாரா—பாராசியா பிரிவில் சென்றுகொண்டிருந்த ஒரு புகை வண்டியில், பெண்கள் பெட்டியில், வண்டி நகரும்பொழுது ஒரு முரடன் படிக்கட்டில்ஏறி, கதவைத் திறக்குமாறு கேட்டான். அவன் விருப்பப்படி கதவைத் திறந்து, அவனை பெட்டிக்குள் பிரவேசிக்க விட்டனர் அப்பெண்கள்.

சில நிமிடத்திற்கெல்லாம் கூரிய கத்தி ஒன்றை எடுத்துக் காட்டி, அப்பெண்கள் அணிந்திருந்த நகைகளை கழற்றிக் கொடுக்கும்படி மிரட்டினான் அக்கயவன்.

அங்கிருந்த பெண்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்து வாய் பேசாது கிடந்தனர். ஒரே ஒரு பெண் மட்டும் அதிர்ச்சியிலிருந்து மீட்சி பெற்று, தனது நகைகளை அவன் காண கழற்ற முடியாது என்றும், அவன் கக்கூசுக்குள் சென்று மறைந்துகொள்ள ஒப்புக்கொள்ளுவதானால் நகைகளை கழற்றித் தருவதாகவும் குறிப்பிட்டாள்.

கள்வன் சம்மதித்து, கக்கூஸ் அறைக்குள் சென்றான். சென்றதும், கக்கூஸ் கதவை மூடித் தாளிட்டுவிட்டு, அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து, புகைவண்டியை நிறுத்தி, போலீசிடம் அக்கள்வனை ஒப்படைத்தனர் அப்பெண்மணிகள்!

அன்பளிப்பு

பர்மா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் சி இராமச்சந்திரன் அவர்கள் மூலம் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2/ வரப் பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

நெல்லை மாவட்ட தி. மு. கழகம்

நிறைவேறிய தீர்மானங்கள்

15—5—55-ல், தூத்துக்குடியில் நெல்லை மாவட்ட தி. மு. கழகக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, 29—5—55-ல் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தூத்துக்குடிக்கு வருகை தரும்போது, நெல்லை மாவட்டக் கழகச் சார்பில் வரவேற்பளிப்பதென்றும், அதுபோது மாநில மாநாட்டிற்கான நிதி அளிப்பதென்றும், மாநில மாநாட்டிற்கு மாவட்டப் பங்கை பூர்த்தி செய்ய, மாவட்டத்திலுள்ள மைனர் பஞ்சாயத்துக்களுக்குட்பட்ட கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும் ரூ 25ம், மேஜர் பஞ்சாயத்துகளுக்குட்பட்ட கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும் ரூ 50-ம், நகர மன்றங்களுக்குட்பட்ட கிளைகள் ஒவ்வொன்றும் ரூ. 75-ம் கொடுக்க வேண்டுமெனவும், மேற்படி தொகைகளையெல்லாம் 25—5—55-க்குள் கொடுத்துவிட வேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டிற்கான பங்குத் தொகையை கிளைக் கழகங்கள் வசூல் செய்து, 'பி. எஸ். கே செயபால், மரக்கடை, நாசரேத்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படியும் முடிவு செய்யப்பட்டதுடன், இறுதியில், கழகக் கட்டுப்பாட்டை மீறி ஒழுங்கற்ற முறையில் நடந்துகொண்ட நெல்லைத் தோழர் பே. ஆ. பாலகிருஷ்ணனை இரண்டாண்டு காலத்திற்குக் கழகத்திலிருந்து விலக்கி வைத்தும் தீர்மானிக்கப்பட்டது.

விதவைத் திருமணம்

6—5—55 மாலை 6 மணிக்கு மரக்காணத்தை அடுத்த கரிப்பாளையத்தில், தோழர் மாணிக்கம்—தோழியர் இராஜம் விதவைத் திருமணம், மணமகன் இல்லத்தில், தோழர் ஜி. ராமசாமி தலைமையில் சீர்திருத்த முறையில் நடைபெற்றது. இத்திருமண நினைவாக மணமகன் தோழர் மாணிக்கம் அவர்களால் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் சேலம் வருகை

22-5-5 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சேலம், விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில், சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

சிதம்பரம் தி.மு.கழகப் பொதுக்கூட்டம்

"17—5—55 செவ்வாயன்று சிதம்பரத்தில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்க செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் பெருத்த மழையின் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டன. மீண்டும் அதே ஏற்பாடுகள் 28—5—55 சனியன்று நடைபெறும்,"

என்று, சிதம்பரம் தி.மு.கழகச் செயலாளர் தோழர் இரா. சக்ரவர்த்தி அறிவிக்கிறார்.

பெங்களூர் மாவட்டக் குழு உறுப்பினர்கட்கு

"22-5-55 மாலை 4 மணிக்கு, பெங்களூர் பிளாக்பள்ளி கழக மனையில், பெங்களூர் மாவட்டக் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். கிளைக் கழகத்தின் பிரதிநிதிகள் தவறாமல் வருகைதரக் கேட்டுக் கொள்கிறேன்,"

என்று, பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எ. டி. பிரான்சிஸ் அறிவிக்கிறார்.

லண்டனிலுள்ள

இந்திய அலுவலக நூல் நிலையம்

பாகிஸ்தானுக்கும் உரிமை உண்டு

புதுடில்லி, மே 18—

"லண்டன் இந்தியா அலுவலகத்தில் உள்ள நூல் நிலையமானது ஐக்கிய இந்திய சர்க்காரின் 'வாரிசு'களான இப்போதைய இந்தியா, பாகிஸ்தான் சர்க்கார்களுக்கே சொந்தமானது," என்று இருநாட்டுக் கல்வி அமைச்சர்களும் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும் அந்த நூல் நிலையத்தின் எதிர்காலம் பற்றி இரு சர்க்கார்களும் தான் முடிவு செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.